## கிராம்பு

**1.தண்டு துளைப்பான்: *சகாயட்ராஸஸ் மலபரிக்கஸ்***

**சேதத்தின் அறிகுறிகள்:**

- தண்டு துளைப்பான் இளஞ்செடிகளின் அடிப்பகுதியிலிருந்து தாக்க ஆரம்பிக்கிறது.
- புழுக்கள் தண்டுகளைச் சுரண்டி சேதப்படுத்தி பிறகு தண்டின் அடிப்பகுதியை நோக்கி குடைந்து செல்கிறது.
- தண்டில் புழுக்கள் துளைக்கப்பட்ட இடங்களில் புழுவின் கழிவுப் பொருட்கள் இருக்கும்.
- தாக்கப்பட்ட மரங்கள் வாடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- 0.1 குவினாஸ்ஃபாஸ் சதவிகிதம கரைசலை தண்டுக் கிளைகளுக்கு உள்ளே செலுத்தவும்.
- மரத்தின் அடிப்பகுதியில் கார்பரில் கலவையைப் பூசவேண்டும்.

**2.செதில் பூச்சிகள்: *சாய்செட்டியா நைக்ர, மைசிடேஸ்பிஸ் பர்சோனேட்டா, லிக்கேனியம்* வகைகள்**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இளம் தளிர், தண்டு மற்றும் கிளைகளை தாக்கும்.
- தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாக மாறி உதிர்ந்து விடும்.

- **கரும்புகை பூசாணம்** உருவாக பூச்சியிலிருந்து வெளிவரும் தேன் போன்ற திரவம் உதவுகிறது.

**பூச்சியின் விபரம்**

***சாய்செட்டியா நைக்ரா :*** பளபளப்பான கருப்பான உருண்டையான பூச்சி.

***மைசிட்டேஸ்பிஸ் பாசோனேட்டா:*** சாம்பல் கலந்த பழுப்பு நிற உருண்டையான பூச்சி.

***லிக்கேனியம்* வகைகள்**: தட்டையான, பச்சையற்ற மிருதுவான பூச்சி, உடலின் மேற்பகுதி உயர்ந்து குவிந்து காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- தாக்கப்பட்ட இலைகள் மற்றும் கிளைகளை அகற்றவேண்டும்.
- டைமீத்தோயேட் @ 1 மிலி / லிட்டர் அல்லது மானோகுரோட்டோஃபாஸ்@ 1.5 மிலி / லிட்டர் தெளிக்கலாம்.

3.மாவுப்பூச்சி: ***பலவினேரியா சிடி***

**சேதத்தின் அறிகுறிகள்**

- மிருதுவான பச்சைநிற மாவுப்பூச்சி இளம் இலையின் அடிப்பரப்பில் இருக்கும்.
- இலைகள் மஞ்சளாக மாறும், வாடிவிடும்.
- **கரும்புகைப் பூசணம்** உருவாக பூச்சியிலிருந்து வெளிவரும் தேன் போன்ற திரவம் உதவுகிறது.

4.இலைப்பேன்: ***சிர்ட்டோதிரிப்ஸ் டார்சாலிஸ்***

**சேதத்தின் அறிகுறிகள்**

- தாக்கப்பட்ட இலைகள் இளஞ்சிவப்பு நிறமாக மாறும்.
- இலைகளில் வெண்ணிறப் புள்ளிகளை உண்டாக்கும்.
- பூக்கள் உதிர்ந்து விடும்.

**பூச்சியின் விபரம்:**

**இளம் குஞ்சுகள்** : மிகச்சிறிய, நீளமானது எளிதில் உடைகிற உடலினை உடையது. வைக்கோலின் மஞ்சள் நிறம் போன்று இருக்கும்.

**â**ச்சி: மயிரிழைகளால் ஆன இறகுகளை உடையது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- தாக்கப்பட்ட இலை மற்றும் கிளைகளை அகற்றவேண்டும்.
- டைமீதோயேட் அல்லது மீதைல் டிமேட்டான் @ 2 மிலி / லிட்டர் தெளிக்கவும்.